# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2022

| தரம் - 11 | சைவநெறி **I,II** | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
| --- | --- | --- |

### சைவநெறி - I

**அறிவுறுத்தல்கள் :**
- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1) இறைவனின் ஐந்தொழில்களில் அருளல் குறிப்பது
(1) சிருஷ்டி (2) அநுக்கிரகம் (3) திரோபவம் (4) சங்காரம்

2) "உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்று குறிப்பிட்டவர்
(1) சுவாமி விபுலானந்தர் (2) சுவாமி விவேகானந்தர்
(3) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (4) திருவள்ளுவர்

3) "படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்.." என வரும் பாடல் இடம்பெறும் நூல்
(1) திருக்குறள் (2) பெரியபுராணம் (3) புறநானூறு (4) திருமந்திரம்

4) 'சத்தியம் வத' என்ற மகாவாக்கியம் உள்ள நூல்
(1) வேதம் (2) உபநிடதம் (3) புராணம் (4) ஆகமம்

5) சூரியனை அடிப்படையாகக் கொண்டு காலம் கணிக்கும் முறை
(1) அமாந்தம் (2) பூர்ணிமாந்தம் (3) சௌரமானம் (4) சந்திரமானம்

6) "சுவாமி நான் இறக்கும் இத்தினத்தில் உன்னை அருச்சித்து வழிபடுவோர்க்கு அருள்புரிய வேண்டும்" என கிருஷ்ண பகவானிடம் வரம் கேட்டவர்
(1) தாரகாசுரன் (2) நரகாசுரன் (3) கஜமுகாசுரன் (4) சூரன்

7) திருக்கார்த்திகை விளக்கீடு பெரும் விழாவாகக் கொண்டாடப்படும் அக்கினித்தலம்
(1) சிதம்பரம் (2) திருச்செந்தூர் (3) திருவண்ணாமலை (4) திருக்கேதீச்சரம்

8) திருநீற்றுக்குரிய மறு பெயர்களுள் ஒன்றான **'பசிதம்'** என்பதன் கருத்து
(1) மேலான செல்வத்தைத் தருவது (2) பாவங்களை எரித்து நீறாக்குவது
(3) உயிகளது மும்மலங்களையும் நீக்குவது (4) ஒளியைக் கொடுப்பது

9) 'பாட்டு' என்ற பொருளைத் தரும் வேதம்
(1) இருக்கு வேதம் (2) சாம வேதம் (3) யசுர் வேதம் (4) அதர்வண வேதம்

10) பஞ்சாட்சரத்தின் பொருளையும் பெருமையையும் விளக்கும் சைவசித்தாந்த நூல்
(1) கொடிக்கவி (2) உண்மைநெறி விளக்கம்
(3) சிவஞானபோதம் (4) உண்மை விளக்கம்

11) 'தென்னவன் பிரமராயன்' என்னும் சிறப்புப் பட்டத்துக்குரிய சமய குரவர்
(1) சுந்தரர் (2) மாணிக்கவாசகர் (3) திருஞானசம்பந்தர் (4) திருநாவுக்கரசர்

12) மகாளயபட்ச காலம் எனப்படுவது
(1) புரட்டாதி மாத பூர்வபக்கப் பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள காலம்
(2) ஐப்பசி மாத பூர்வபக்கப் பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள காலம்
(3) புரட்டாதி மாத அபரபக்கப் பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள காலம்
(4) கார்த்திகை மாத அபரபக்கப் பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள காலம்

13) யாகங்களின்போது மேற்கொள்ள வேண்டிய சடங்கு முறைகளை விளக்கும் வேதத்தின் பகுதி
(1) பிராமணங்கள் (2) ஆரணியகங்கள் (3) சங்கிதைகள் (4) உபநிடதங்கள்

14) "நாயகனார் முன்னம் உரைத்த ஆகம நூல்" என ஆகமத்தின் தோற்றம் பற்றிக் குறிப்பிட்டவர்
(1) திருமூலர் (2) மாணிக்கவாசகர் (3) சேக்கிழார் (4) சேந்தனார்

15) திருவிசைப்பா, திருப்பல்லாண்டு இரண்டையும் பாடியவர்
(1) கருவூர்த்தேவர் (2) சேந்தனார் (3) வேணாட்டடிகள் (4) திருமாளிகைத்தேவர்

16) "சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன் ..." என்ற பாடல் உள்ள நூல்
(1) கந்தரலங்காரம் (2) பராபரக்கண்ணி (3) கந்தபுராணம் (4) அபிராமி அந்தாதி

17) இறுதியாகச் செய்யப்படும் யாகம் என்ற பொருளைத் தருவது
(1) மகாளயம் (2) சிரார்த்தம் (3) அந்தியேஷ்டி (4) அஸ்தி சஞ்சயனம்

18) ஸ்காந்த புராணத்தில் உள்ளதும் கச்சியப்பச் சிவாச்சாரியாரது கந்தபுராணத்தில் இல்லாததுமான காண்டம்
(1) சம்பவ காண்டம் (2) மகேந்திர காண்டம் (3) தேவ காண்டம் (4) உபதேச காண்டம்

19) குங்கிலியக்கலய நாயனார் நின்ற நெறி
(1) சரியை (2) கிரியை (3) யோகம் (4) ஞானம்

20) சுபமுகூர்த்த நிர்ணயம் அவசியமில்லாத பிரதிஷ்டை
(1) புனராவர்த்தனம் (2) அநாவர்த்தனம் (3) ஆவர்த்தனம் (4) அந்தரிதம்

21) திருவுருவங்களை பீடத்தின் மேல் நிலைநிறுத்துதல் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) கர்ஷணம் (2) பிரதிஷ்டை (3) பெருஞ்சாந்தி (4) மகோற்சவம்

22) கோயிற்புராணம், திருமுறைகண்ட புராணம் ஆகிய நூல்களை அருளியவர்
(1) உமாபதி சிவாச்சாரியார் (2) அருணந்தி சிவாச்சாரியார்
(3) சேக்கிழார் (4) பரஞ்சோதி முனிவர்

23) சிவஞானபோதத்தின் சார்பு நூல்
(1) சிவஞானசித்தியார் (2) திருவருட்பயன் (3) சிவப்பிரகாசம் (4) உண்மைவிளக்கம்

24) ஊரைக் காவல் செய்யும் பாவனையில் வைரவ மூர்த்திக்குச் செய்யும் பூசை
(1) வாஸ்து சாந்தி (2) திருவிழா (3) வஸ்திர சாந்தி (4) கிராம சாந்தி

25) ஆலய மகோற்சவத்தில் தீர்த்தத் திருவிழா குறிக்கும் இறைவனது தொழில்
(1) அழித்தல் (2) மறைத்தல் (3) அருளல் (4) காத்தல்

26) தோத்திர நூலாகவும், சாத்திர நூலாகவும் விளங்குவது
(1) தமிழாகமம் (2) பெரியபுராணம் (3) திருவாசகம் (4) திருப்பல்லாண்டு

27) 'பிரபோதசைதன்யர்' என்ற பிரமச்சரிய நாமத்தோடு பணியாற்றிய சமயப் பெரியார்
(1) சுவாமி சிவானந்தர் (2) சுவாமி விவேகானந்தர்
(3) சுவாமி விபுலானந்தர் (4) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

28) மூலமலம், சகச மலம் என அழைக்கப்படுவது
(1) கன்மம் (2) ஆணவம் (3) மாயை (4) பாசம்

29) எல்லோரும் வழிபடுவதற்காக திருக்கோயில்களில் நிலையாக தாபிக்கப்படும் லிங்கம்
(1) பரார்த்தலிங்கம் (2) சணிகலிங்கம் (3) ஆன்மார்த்தலிங்கம் (4) சிவனடியார் கூட்டம்

30) அண்மைக்காலத்தில் ஸ்ரீ சத்தியபாமா ருக்மணி சமேத பார்த்தசாரதி கோயிலாக பெயர்மாற்றம் பெற்ற ஆலயம்
(1) பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலயம் (2) பழுகாமம் திரௌபதையம்மன் ஆலயம்
(3) புளியந்தீவு திரௌபதையம்மன் ஆலயம் (4) உடப்பு திரௌபதையம்மன் ஆலயம்

31) வைரவருக்குரிய விசேட தினங்களில் ஒன்று
(1) சித்திரைப் பரணி (2) ஆடிப் பூரம் (3) கார்த்திகைப் பரணி (4) வைகாசி விசாகம்

32) ஸ்ரீ தட்சிணகைலாய புராணம் எந்தத் தலம் பற்றிக் குறிப்பிடுகிறது?
(1) முன்னேஸ்வரம் (2) திருக்கேதீஸ்வரம் (3) நகுலேஸ்வரம் (4) திருக்கோணேஸ்வரம்

33) அவைதிக நெறிகளுக்கு உதாரணமாக அமைந்தவை
(1) சௌரம், கௌமாரம் (2) சமணம், பௌத்தம்
(3) பௌத்தம், சாக்தம் (4) சைவம், வைஷ்ணவம்

34) சாலோக முத்தி பெற்ற சமய குரவர்
(1) ஆளுடைய நம்பி (2) ஆளுடைய பிள்ளை
(3) ஆளுடைய அரசு (4) ஆளுடைய அடிகள்

35) பாம்பு தீண்டி இறந்த வணிகனை உயிர்ப்பிக்க சம்பந்தர் பாடியது
(1) “ துணிவளர் திங்கள்….” (2) “ ஏற்றான் மறக்கேன் ….”
(3) “ சடையா யெனுமால் ….’ (4) “ ஒன்று கொலாமவர் சிந்தை …”

36) நட்சத்திரங்களை மட்டும் கொண்ட தொகுதி
(1) ரேவதி, கார்த்திகை, பூரம் (2) பரணி, கார்த்திகை, கும்பம்
(3) சதயம், மீனம், திருவாதிரை (4) விசாகம், ரேவதி, விருச்சியம்

37) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தோடு தொடர்புடைய விடயங்களுள் பொருத்தமற்றது
(1) குளக்கோட்ட மன்னன் திருப்பணி செய்தான்.
(2) ஆவணி மாத தேய்பிறை முதலாம் நாள் கொடியேற்றம் நடைபெறும்.
(3) கொடித்தம்பம் 60 அடி உயரம் கொண்டது.
(4) ஆலயத்தின் பரிபாலகரை வண்ணக்கர் என அழைப்பர்.

- மேல்வரும் அட்டவணையில் **A** இலிருந்து **I** வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 38 தொடக்கம் 40 வரையான ஒவ்வொரு வினாவுக்குமான விடையைத் தெரிவுசெய்க.

| சைவம் வளர்த்தோர் | பணிகள் | குருபூசை தினம் |
|---|---|---|
| A - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் | D – சித்தாந்த அட்டகத்தை அருளியமை | G – புரட்டாதி பூரம் |
| B - உமாபதி சிவாச்சாரியார் | E – சைவ சித்தாந்த பாடத்தை மாணவர்களுக்கு போதித்தமை | H – கார்த்திகை மகம் |
| C - அருணந்தி சிவாச்சாரியார் | F – வித்தியானுபாலன யந்திரசாலையை நிறுவியமை | I – சித்திரை அத்தம் |

38) “ஆணவத்தின் சொரூபத்தை விளக்க முடியுமா?” எனக் கேட்டவருடன் தொடர்புடைய தொகுதி
(1) AFG (2) CEG (3) CDG (4) BFI

39) ‘தமிழ் வசன நடையின் தந்தை’ எனப் போற்றப்படுபவருடன் தொடர்புடைய தொகுதி
(1) AFI (2) ADH (3) AFH (4) BDH

40) மறைஞான சம்பந்தரது சீடரோடு தொடர்புடைய தொகுதி
(1) BDH (2) CEG (3) BFI (4) BDI

(40 x 1 = 40 புள்ளிகள்)

*******

# சைவநெறி - II

- முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**(1) மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

i. வேதத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
ii. சிவத்தியானம் என்றால் என்ன?
iii. 'கடவுள் ஒருவரே' என்பதை வேதம் எவ்வாறு எடுத்துரைக்கிறது?.
iv. திலகவதியாரின் தாய், தந்தையர் பெயர் யாது?
v. சிவஞானசித்தியாரில் உள்ள **இரண்டு** பகுதிகளும் எவை?
vi. அருணகிரிநாதர் அருளிய பக்திப் பனுவல்கள் **இரண்டினைத்** தருக.
vii. சிவனடியார்களை வழிபட்டு முத்தியடைந்த நாயன்மார்கள் **இருவரைக்** குறிப்பிடுக.
viii. இந்துக்களின் திருமணக் கிரியையில் அக்கினியைச் சுற்றி மணமக்கள் வலம் வருவதற்கான காரணம் யாது?
ix. 'நலமில நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன்' இவற்றில் **'சலமிலன்'** என்பதன் கருத்து யாது?
x. 'பாதிமதி' எனும் திருப்புகழில் முருகப்பெருமானிடம் அருணகிரிநாதர் வேண்டும் வரம் யாது?

(10 x 2 = 20 புள்ளிகள்)

**(2)** (i) மேல்வரும் பாடல்களுள் **இரண்டினை** அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

(அ) "உற்றமை சேர்வது ..."
(ஆ) "பச்சைமா மலைபோல் ...."
(இ) "மீளா அடிமை உமக்கே ..."
(ஈ) "தண்ணளி வெண்குடை ...."
(உ) "தூக்கும் பனுவல் துறை ...."

(ii) மேலே (i) இல் எழுதிய பாடல்களின் பொழிப்புரையை எழுதுக. (3+2 = 5x 2 = 10 புள்ளிகள்)

**(3) "வேதமும் ஆகமமும் இறைவனால் அருளப்பட்டவையாகும்"**

(i) ஆகமம் என்ற சொல்லின் பொருள் யாது?
(ii) ஆகமம் சிறப்புநூல் என்று அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?
(iii) சிவாகமங்கள் பற்றி சுருக்கமாக விளக்குக. (2+3+5 = 10 புள்ளிகள்)

**(4) "பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப்போல் பசு பாசம் அநாதி"** (திருமந்திரம்)

(i) ஆன்மாவின் இயல்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
(ii) மூவகை ஆன்மாக்களும் எவை?
(iii) இறைவனின் இரு நிலைகளையும் குறிப்பிட்டு, சுருக்கமாக விளக்குக. (2+3+5 = 10 புள்ளிகள்)

**(5) "வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி"**

(i) சுந்தரமூர்த்தி நாயனாருக்கு வழங்கப்படும் மறு பெயர்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
(ii) சுந்தரரை 'வன்றொண்டர்' என அழைத்தமைக்கான காரணம் யாது?
(iii) சுந்தரமூர்த்தி நாயனாரது அற்புதங்கள் **ஐந்தினை** சுருக்கமாக விளக்குக. (2+3+5 = 10 புள்ளிகள்)

**(6) "ஆன்மீக மேம்பாட்டிற்கு விரதங்களும் சிறந்த சாதனங்களாகும்"**

(i) விநாயகசஷ்டி விரதம் அனுட்டிக்கப்படும் காலம் யாது?
(ii) 'ஆருத்ரா தரிசனம்' என்றால் என்ன?
(iii) வரலட்சுமி விரதம் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (2+3+5 = 10 புள்ளிகள்)

**(7)** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) சுவாமி விபுலானந்தர்
(ii) நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்.
(iii) சைவ வித்தியாவிருத்திச் சங்கம்
(iv) தெய்வ சிந்தனை (5 x 2 = 10 புள்ளிகள்)

*******